அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு

# 2023/2024

# தமிழ்

## ஆண்டு 9

| | |
|---|---|
| **நேரம்: 150 மணித்துளிகள்** | **மொத்தப்புள்ளிகள்:** 100<br>(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| **நாள்: சனிக்கிழமை** | **பக்கங்கள்:** 16 |
| **பெயர்:** | |
| **தமிழ்ப்பள்ளி:** | |

## பகுதி 1 – எழுத்து

**1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

**1 2 3 4**

1. முற்காலத்தில் கூத்து, நட்டம், நடம் என அழைக்கப்பட்டது
   1. ஓவியம்
   2. ஆடற்கலை
   3. சிற்பம்
   4. இசை

2. உணர்ச்சியை வெளிப்படுத்தப் பயன்படுத்தப்படும் நிறுத்தற்குறி
   1. அடைப்புக்குறி
   2. காற்புள்ளி
   3. வியப்புக்குறி
   4. முக்காற்புள்ளி

3. சென்றது என்ற பகுசொல்லின் பகுதி
   1. செல்
   2. சென்று
   3. சென்ற
   4. சென்

4. பகாச்சொல்லாக அமைவது
   1. கலை
   2. கலைஞர்
   3. பாடினர்
   4. ஓடினர்

5. மாதவியின் அரங்கேற்றம் நடைபெற்ற நகரம்
   1. மதுரை
   2. வஞ்சி
   3. புகார்
   4. சென்னை

6. பக்தி இலக்கியகாலம்
   1. சோழர்காலம்
   2. பல்லவர்காலம்
   3. சங்கமருவியகாலம்
   4. சங்ககாலம்

7. சைவ வழிபாட்டைப் போற்றிப் பாடியோர்
   1. நாயன்மார்
   2. ஆழ்வார்
   3. வைணவர்
   4. சமணர்

1 2 3 4

8. மணி + ஓசை என்பதைப் புணர்த்தி எழுதினால்
   1. மணிவோசை
   2. மணிஓசை
   3. மணியோசை
   4. மணிய்ஓசை

9. கைநீட்டுதல் என்ற மரபுச்சொற்றொடர் குறிப்பது
   1. அடித்தல்
   2. பழித்தல்
   3. மகிழ்தல்
   4. முறித்தல்

10. மேலிருந்து என்பதைப் பிரித்து எழுதினால்
    1. மேல் + லிருந்து
    2. மேன் + இருந்து
    3. மெல் + இருந்து
    4. மேல் + இருந்து

11. கன்னியா வெந்நீரூற்று அமைந்துள்ள இடம்
    1. அம்பாறை
    2. மட்டக்களப்பு
    3. திருகோணமலை
    4. முல்லைத்தீவு

12. யாப்பு இலக்கணங்களுக்கு அமைய எழுதப்படுவது
    1. மரபுக்கவிதை
    2. சிறுகதை
    3. புதுக்கவிதை
    4. நாடகம்

13. மல்லிகைப்பூ கமகம என்று மணம் வீசியது. இதில் கமகம என்பது
    1. அடுக்குத்தொடர்
    2. இரட்டைக்கிளவி
    3. அடுக்கிடுக்குத்தொடர்
    4. இணைமொழி

14. உவமையுருபுகளாக அமைபவை
    1. போல, புரைய
    2. உம், தோறும்
    3. கின்று, கிறு
    4. ஐ, ஆல்

1 2 3 4

15. மயில் அகவும் என்பது போல கோழி
    1. கரையும்
    2. கத்தும்
    3. கொக்கரிக்கும்
    4. குறுகுறுக்கும்

16. க், ச், ட், த் என்பவற்றின் இன எழுத்துகள்
    1. அ, ஆ, இ, ஈ
    2. ங், ஞ், ண், ந்
    3. ப், ம், ட், ண்
    4. க, ச, ட, த

17. பாரி மன்னனின் அவைக்களப் புலவர்
    1. கபிலர்
    2. பரணர்
    3. நக்கீரர்
    4. காளமேகம்

18. குதிரையின் இளையது குட்டிபோல அணிலின் இளையது
    1. கன்று
    2. குட்டி
    3. பிள்ளை
    4. பறழ்

19. பொற்கொல்லனின் சூழ்ச்சியால் கொலையுண்டவர்
    1. மாநாய்கன்
    2. மாசாத்துவன்
    3. பாண்டியன்
    4. கோவலன்

20. புதுவகையான நோய்கள் வரக்காரணங்களுள் ஒன்று
    1. உயிரினங்கள் பெருகுவது
    2. பயிர்கள் வளர்ப்பது
    3. நிறையுணவு உண்பது
    4. கழிவுப்பொருள்களைக் கடலில் கொட்டுவது

21. தேன் போன்ற மொழி. இதன் பொதுத்தன்மை
    1. தேன்
    2. இனிமை
    3. மொழி
    4. போன்ற

22. அக்கரை மாட்டுக்கு இக்கரை
    1. சிவப்பு
    2. பச்சை
    3. நீலம்
    4. வெள்ளை

1 2 3 4

23. உதைபந்தாட்டத்தில் யாழ்ப்பாணம் வென்றது. இதில் வந்துள்ள ஆகுபெயர்
    1. இடவாகுபெயர்
    2. பொருளாகுபெயர்
    3. காலவாகுபெயர்
    4. தொழிலாகுபெயர்

24. குடிமக்கள் காப்பியம் என அழைக்கப்படுவது
    1. மணிமேகலை
    2. குண்டலகேசி
    3. சிலப்பதிகாரம்
    4. வளையாபதி

25. உலக அறிவின்மையைக் குறிக்கும் உவமைத்தொடர்
    1. காட்டுத் தீ போல
    2. இலவு காத்த கிளி போல
    3. கிணற்றுத் தவளை போல
    4. அனலில் இட்ட மெழுகு போல

26. இடைப்பகாச் சொல்லாக அமைவது
    1. மண்
    2. கழி
    3. நட
    4. உம்

27. இயல்புப்புணர்ச்சிக்கு எடுத்துக்காட்டு
    1. உயிரெழுத்து
    2. நூற்றாண்டு
    3. விளாங்காய்
    4. சேவடி

28. பல்லவர் காலத்தில் தோன்றிய இலக்கியங்களுள் ஒன்று
    1. திருக்குறள்
    2. முத்தொள்ளாயிரம்
    3. புறநானூறு
    4. கலித்தொகை

29. தமிழீழத்தில் நானிலங்களையும் உள்ளடக்கிய பட்டினம்
    1. திருகோணமலை
    2. யாழ்ப்பாணம்
    3. கிளிநொச்சி
    4. மன்னார்

30. நிலத்தில் புதையும்போது மண்ணின் வளத்தைக் கெடுக்கும் கழிவு
    1. இலைகள்
    2. நெகிழிகள்
    3. விலங்குகளின் கழிவுகள்
    4. உணவுக் கழிவுகள்

(30 x 1 = 30 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. ஆடற்கலைஞர்கள் ஊரகக் கலைகளை எவ்வாறு பேணி வருகின்றனர்?

______________________________

______________________________

2. பல்லவர் காலத்தில் தமிழ்மொழிக்குச் சிறப்புச்சேர்த்த இரண்டு இலக்கியங்கள் எவை?

______________________________

______________________________

3. இயற்கையைப் பாதுகாக்க நாம் செய்யக்கூடிய இரண்டு வழிமுறைகளை எழுதுக.

______________________________

______________________________

4. காடுகளை அழிப்பதற்குக் கூறப்படும் காரணங்கள் இரண்டு எழுதுக.

______________________________

______________________________

5. தரப்பட்டுள்ள உருவக அணிகளை உவமை அணிகளாக மாற்றி எழுதுக.

விழிவேல்: ______________________________

நெஞ்சக்கல்: ______________________________

6. அணை என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வருமாறு சொல்லியங்கள் எழுதுக.

பெயர்: ______________________________

வினை: ______________________________

7. படிக்கின்றனர் என்ற பகுசொல்லில் வந்துள்ள பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை என்பவற்றை எழுதுக.

பகுதி: ______________ விகுதி: ______________

இடைநிலை: ______________ சாரியை: ______________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**3. தரப்பட்டுள்ள சொற்களின் பொருள் விளங்கச் சொல்லியம் எழுதுக.**

1. புவி: ____________________________________________

____________________________________________

____________________________________________

2. கோலாட்டம்: ____________________________________________

____________________________________________

____________________________________________

3. அதிகாலை: ____________________________________________

____________________________________________

____________________________________________

4. கொள்கை: ____________________________________________

____________________________________________

____________________________________________

5. அறிவியல்: ____________________________________________

____________________________________________

____________________________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**4. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

ஏடெடுத்தேன் கவி ஒன்று வரைந்திட
என்னை எழுதென்று சொன்னது வான்!
ஓடையும் தாமரைப் பூக்களும் தங்களின்
ஓவியம் தீட்டுக என்றுரைக்கும்!
காடும் கழனியும் கார்முகிலும் வந்து
கண்ணைக் கவர்ந்திட எத்தனிக்கும்
ஆடும் மயில்நிகர் பெண்களெல்லாம் உயிர்
அன்பினைச் சித்திரம் செய்க, என்பார்!

- கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன்

1. கவிஞர் கவி வரைந்திட எதை எடுத்தார்?

___

2. வான் என்ன சொன்னது ?

___

3. ஓவியம் தீட்டுக என்று உரைத்தவை எவை?

___

4. கண்ணைக் கவர்ந்திட எத்தனிப்பவை எவை?

___

5. பெண்களுக்கு நிகர் எது என்று கவிஞர் கூறுகிறார்?

___

(5 X 2 = 10 புள்ளிகள்)

**5. தரப்பட்டுள்ள சொல்லியங்களை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

**தமிழ்:**

1. நாம் பெரியவர்களை மதித்து நடக்க வேண்டும்.
2. இன்று உலகில் வாழும் மக்கள் போர், இயற்கை அழிவுகள் போன்றவற்றால் பெரும் துன்பப்படுகின்றனர்.
3. இன்றைய உலகில் செய்திகளை விரைவாகப் பரிமாற்றம் செய்ய இணையம் துணைநிற்கிறது.
4. தமிழீழத்தில் அல்லற்படும் மக்களுக்கு நாம் எம்மால் இயன்ற உதவிகளைச் செய்வோம்.
5. தமிழர் வாழிட நாடுகளிலும் ஆடற்கலையைப் பேணி வருகின்றனர்.

**வாழிடமொழி:**

1. ________________________________________

________________________________________

2. ________________________________________

________________________________________

3. ________________________________________

________________________________________

4. ________________________________________

________________________________________

5. ________________________________________

________________________________________

(5 x 2 = 10 புள்ளிகள்)

**6. தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. பல்லவர் காலம்
2. சிலப்பதிகாரம்
3. நோய்த்தொற்று

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**

   - நோய்த்தொற்றுக்கான காரணங்கள்
   - மாணவரது கல்விச் செயற்பாடும் நோய்த்தொற்றும்
   - நோய்த்தொற்றைத் தடுக்கும் வழிகள்

4. புலம்பெயர் தமிழரது வாழ்வியல்

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**

   - புலப்பெயர்வினால் ஏற்படும் உளவியல் தாக்கங்கள்
   - புலம்பெயர் தமிழரது பழக்கவழக்கங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்
   - ஐரோப்பிய பண்பாட்டுத் தாக்கங்கள்

(15 புள்ளிகள்)

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையானவிடை எழுதுக.**

முற்போக்குச் சிந்தனையுள்ள கவிஞர்கள் பலர் ஈழத்தில் வாழ்ந்துள்ளனர். அவர்களுள் வித்துவான் க. வேந்தனார் குறிப்பிடத்தக்கவர். இவர் யாழ்ப்பாண மாவட்டத்தின் தெற்கே உள்ள வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வேந்தனார் ஒரு தமிழ்ப் பற்றாளர், நல்லாசிரியர், சிறந்த கவிஞர், திறமை மிக்க சொற்பொழிவாளர். இவரது இயற்பெயர் நாகேந்திரம்பிள்ளை. இவர் தனித்தமிழ் ஆர்வத்தினால் வேந்தனார் எனத் தனது பெயரை மாற்றிக்கொண்டார். ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் வேந்தனாரது சிறுவர் இலக்கியத்தின் பங்கு அளப்பரியது. 'அம்மாவின் அன்பு' என்னும் தலைப்பில் வேந்தனார் எழுதிய, 'காலைத்தூக்கிக் கண்ணில் ஒற்றிக் கட்டிக் கொஞ்சும் அம்மா' எனத் தொடங்கும் பாடல் சிறந்த பாடலாகும். சிறுவர்களுக்காக எழுதிய பாடல்களிலிருந்து எல்லா உயிர்களிடமும் அவர் காட்டும் அன்பைப் பற்றி நாம் அறிந்து கொள்ளலாம். அவர் குமுகாயத்தில் நிலவும் மூடநம்பிக்கைகளை எதிர்த்துக் கவிதைகள் பல எழுதியுள்ளார். வேந்தனாரது இளமைப்பருவமானது ஆங்கிலேயர் ஆட்சியின்கீழ் ஈழம் அடிமைப்பட்டிருந்த காலமாக இருந்தது. அடிமை வாழ்வை விரும்பாத வேந்தனார் ஆங்கிலேயரது ஆட்சியை எதிர்த்துப் பல பாடல்களை எழுதினார். வேந்தனாரது கவிதைகள், கட்டுரைகள் போன்ற படைப்புகள் ஈழத்துத் தமிழ் இலக்கியத்துக்கு என்றும் வளம் சேர்க்கும்.

1. வேந்தனார் எப்படியான புலவராக வாழ்ந்தார்?

______________________________________________

2. அவர் வாழ்ந்த இடம் எது?

______________________________________________

______________________________________________

3. வேந்தனாரின் இயற்பெயர் என்ன?

______________________________________________

4. அவரது சிறுவர் இலக்கியத்துக்கான சிறந்த பாடலாகக் கூறப்பட்டது எது?

______________________________________________

5. ஆங்கிலேயர் ஆட்சியை விரும்பாத வேந்தனார் என்ன செய்தார்?

______________________________________________

(5 x 2 = 10 புள்ளிகள்)

2. **அழைப்பிதழை வாசித்து, தரப்பட்டுள்ள கூற்றுகள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் ✗ எனவும் அடையாளமிடுக.**

**அழைப்பிதழ்**

வள்ளுவர் தமிழ்ப்பள்ளியின் வெள்ளிவிழா கொண்டாடப்பட உள்ளது. முனைவர் அ. அறிவழகன் முதன்மை விருந்தினராகப் பங்கேற்று 'மாணவரின் எதிர்காலம்' என்ற தலைப்பில் உரையாற்றுவதுடன் மாணவர்களுக்கான மதிப்பளிப்புகளையும் வழங்குவார்.

**இடம்:** தமிழ்ப்பள்ளி மண்டபம்
**காலம்:** 04.03.2023 சனிக்கிழமை
**நேரம்:** 15:00 தொடக்கம் 19:00 மணி வரை

வெள்ளிவிழா நிகழ்வுகளைக் கண்டு மகிழ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- முதல்வர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்

**மின்னஞ்சல்:** valavan23@gmail.com

1. முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்பவர் ஓவியர் அறிவழகன். ( )
2. தமிழ்பள்ளியின் பெயர் வள்ளுவர் தமிழ்ப்பள்ளி. ( )
3. வெள்ளிவிழாவானது பள்ளி மண்டபத்தில் நடைபெறும். ( )
4. வெள்ளிவிழா 15:00 மணிக்குத் தொடங்கும். ( )
5. இவ்விழா இரண்டு நாள்கள் நடைபெறும். ( )

(5 x 1 = 5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |